விலை: 40.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 129 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 14 புதன்கிழமை (27.04.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## லிட்ரோ எரிவாயு விலைகள் இன்று முதல் அதிகரிப்பு
### 12.5 கிலோ சிலிண்டரின் புதிய விலை ரூ. 4,860



(கொழும்பு)
லிட்ரோ வீட்டு சமையல் எரிவாயு விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.
இன்று முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலாகவுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
அதன்படி, லிட்ரோ 12.5 கிலோகிராம் எரிவாயுவின் புதிய விலை 4,860 ரூபாயாகவும் 5 கிலோ எரிவாயுவின் விலை 1,945 ரூபாயாகவும் 2.3 கிலோ எரிவாயு கொள்கலனின் விலை 910 15

## நாளை நாடு முடங்கும் அபாயம்!
### அரச, தனியார் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானம்

(கொழும்பு)
அரச, தனியார் ஊழியர்கள் அரசுக்கு எதிராக நாளை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். இதனால் நாளை 28 ஆம் திகதி நாடு முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களுக்கும் மரக்கறிகள் நாளை விநியோகிக்கப்படமாட்டாதென அகில இலங்கை விசேட பொருளாதார மத்திய நிலையங்களின் சங்கம் தெரிவித்துள்ளது. அதன் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்தார்.
அரச ஊழியர்கள் மற்றும் தனியார்துறை ஊழியர்கள் அரசாங்கத்திற்கு எதிராக நாளை முன்னெடுக்கவுள்ள தொழிற்சங்க நடவடிக்கையினால் மரக்கறிகளை 15

## இயக்கச்சியில் விபத்து பெண் உயிரிழப்பு

(பளை)
பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச பேருந்து ஒன்று முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், இயக்கச்சியில் அமைந்துள்ள 15

# யார் சொன்னாலும் பதவி விலகேன்
## முடிந்தால் அனுப்புங்கள்
## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)
யார் சொன்னாலும் தான் ஒருபோதும் பதவி விலகமாட்டேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
யாருக்காவது என்னை பதவியை விட்டு அனுப்ப முடியுமானால் அனுப்புங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.
(15 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் நீதியமைச்சராக அலி சப்ரி நியமனம்



(கொழும்பு)
நிதியமைச்சர் அலி சப்ரி, மீண்டும் நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரி 15

## நாய்க்கடிக்கிலக்கான குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
தெரு நாய்க்கடிக்கிலக்காகிய குடும்பத் தலைவர் நீர்வெறுப்பு நோய்க்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.
அவருக்கு விலங்கு விசர் நோய்த் 15

## “இதயத்தை உடைக்கும் கதைகளை நேரடியாக கேட்டு அறிந்தேன்”
### உறவுகளை சந்தித்தபின் அமெரிக்கத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)
“இதயத்தை உடைக்கும் கதைகளை இன்று நேரடியாக கேட்டு அறிந்தேன்” என யாழுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கத் தூதுவர் 15

## 600 மில்லியன் உலகவங்கி நிதி உதவி

(கொழும்பு)
தற்போதைய பொருளாதார நெருக் 15

## அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது
### சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண

(கொழும்பு)
அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.
சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 15

## ராஜபக்சக்களின் ஆட்சியை அகற்றி 13ஐ முழுமையாக அமுல்படுத்துவேன்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
அனைத்து ஜனநாயக வழிமுறைகளையும் பின்பற்றி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சியை அகற்றி, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.
அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்நடைகள் உடன் விற்பனைக்கு உண்டு

1 வயதுடைய ஜேர்சி நாம்பன் கன்று - 45,000/=

சணல் ஆடு 2 ஆம் ஈற்று மறிக்குட்டியுடன் - 48,000/=

மொட்டைக்கொம்பன் சணல் 1 வயது கடாய் - 48,000/=

021 225 1380 (11166)


# மகாநாயக்க தேரரிடம் ஆசீர்வாதம் பெற்ற சஜித்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுக் காலை கண்டி வரலாற்றுச் சிறப்புமிக்க அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன மகாநாயக்க தேரரைச் சந்தித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். மகாநாயக்க தேரரின் நலன் விசாரித்த எதிர்க்கட்சித் தலைவர் நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலைமைகள் குறித்தும் அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ம-7)


## விற்பனையாளர்கள் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் டிக்கெட்டுகள் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. (லொத்தர் கூடுகளிலும் சைக்கிளிலும் நடந்து விற்பனை செய்பவர்களும் விரும்பத்தக்கது.)
அங்கவீனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு (11176)

077 603 1723, 077 213 3460


## துயர் பகிர்கின்றோம்



நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியத்தின் பொருளாளரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக கடமையாற்றும் **பரராமசிங்கம் கார்த்திகேயன்** அவர்களின் அன்புத் தந்தையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக கடமையாற்றும் **கார்த்திகேயன் ராஜினி** அவர்களின் அன்பு மாமனாருமான

### குமாரசிங்கம் பரராமசிங்கம்

கடந்த 21.04.2022 வியாழக்கிழமையன்று இறைபதமடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நிறைவுகாண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்கள் ஒன்றியம், யாழ்ப்பாணம்.**

(11174)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)

- முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (பழைய பாடத்திட்டம் – மீள்பரீட்சார்த்திகளுக்கானது)
- முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2020 (புதிய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளினை 21.05.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 05.06.2022 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சை தொடர்பான நேர அட்டவணை. பரீட்சை அனுமதி அட்டையினை 13.05.2022 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 20.05.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**26.04.2022**

(C-4246)

# மரண அறிவித்தல்

## திருமதி
## இராசேஸ்வரி இலங்கநாதன்



இணுவில் கிழக்கு, அங்கலப்பாயைச் சேர்ந்த திருமதி இராசேஸ்வரி இலங்கநாதன் நேற்று (26.04.2022) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இலங்கநாதனின் அன்பு மனைவியும் பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் செல்லத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகி, சுவாமிநாதபிள்ளை, இராமநாதபிள்ளை மற்றும் அன்னலட்சுமி, இலங்கநாதபிள்ளை (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கலாராணி, காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கலைச்செல்வி மற்றும் கலையரசி, தயாகரன் (ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி), கலைமதி (ஜேர்மனி), இலங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஜெயபாலன், நீதிராஜா, கணேசதாஸ், பத்மலதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் டிலானிகா, இராகுலன், ஆதித்தியா, நிருசன், சாருஜன், கஸ்தூரிகா, கஸ்விகா, கஸ்னிகன், அக்சயராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆதவன், அச்சுதன், அபினயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.04.2022) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் கிழக்கு,**
**அங்கலப்பாய்.**


தகவல்: குடும்பத்தினர்
தொடர்புக்கு: 077 616 0320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் எழுச்சிப் போராட்டம்

(கொழும்பு)

**கொழும்பு - காலி முகத்திடலில் இளைஞர் , யுவதிகள் உள்ளிட்ட பொது மக்களால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் தன்னெழுச்சிப் போராட்டம் நேற்று செவ்வாய்கிழமை 18 ஆவது நாளாகவும் தொடர்கிறது.**





அலரிமாளிகைக்கு முன்னால் பொலிஸ் வாகனங்களை நடைபாதையில் ஆர்ப்பாட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர். இதனால் நேற்று அதி காலையில் குறித்த பகுதியில் சற்று பதற்றமான நிலை காணப்பட்டது.

அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மாத்திரமின்றி மேலும் பல தொழிற்சங்கங்களும் மதங்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். குறித்த போராட்டத்தில் சவப்பெட்டிகளை ஏந்தி வந்த அகில இலங்கை விவசாய போதனாசிரியர்கள் சங்கத்தினர் சவப்பெட்டியை போராட்டக்களத்தில் எரித்து தமது எதிர்ப்பை மேலும் வெளிப்படுத்தினர். இதே வேளைஹிங்குராங் கொடையில் இருந்து வந்த 4 விவசாயிகள் தமது எதிர்ப்பை அரசாங்கத்திற்கு தெரிவிக்கும் முகமாக காலிமுகத்திடல் போராட்டக்களத்திற்கு வருகை தந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (நி)

# அரசாங்கத்திற்கு எதிரான 'ஐக்கிய மக்கள் பேரணி' ஆரம்பம்





(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கண்டியிலிருந்து கொழும்பிற்கு ஏற்பாடு செய்துள்ள பேரணி நேற்று ஆரம்பமானது. இப்பேரணி எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் நிறைவடையும். (நி)

# அடுத்த வாரம் முதல் போக்குவரத்தில் ஈடுபடமாட்டோம்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பேருந்துகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்களுக்குத் தட்டுப்பாடு இடம்பெற்று வருவதால் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதனால் இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வை பெற்றுத்தரா விட்டால் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் இருந்து அடுத்த வாரம் முதல் ஒதுங்கிக்கொள்வோம் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (நி)

# முதலில் இடைக்கால அரசு; அதன் பின்னரே தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்து

(கொழும்பு)

பாராளுமன்றை கலைத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தினால் சுமார் ஆயிரம் கோடி ரூபா செலவாகும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நிலைமைகளினால் தற்போது தேர்தல் ஒன்றுக்கு செல்வது பொருத்தமற்றது என சுட்டிக்காட்டிய அவர்,

பாராளுமன்றின் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து குறுகிய காலத்திற்கேனும் இடைக்கால அரசாங்கமொன்றை நிறுவி ஆட்சி செய்து பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்ல முடியும்.

தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டுமாயின் நான்கு மாத கால அவகாசம் தேவைப்படும்.

அதற்கு முன்னர் எரிவாயு, எரிபொருள் மற்றும் மின்வெட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

தேர்தலுக்கு செலவிடும் பணத்தை இந்தப் பிரச்சினைகளை தீர்க்கப் பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு விக்னேஸ்வரன் எம்.பியும் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் 20ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கும் ஆதரவை வழங்குகின்ற போதிலும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் அவர் குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான எல்லே போட்டி

# பரு. சென்தோமஸ் சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான எல்லே போட்டியில் பருத்தித்துறை சென்தோமஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென்தோமஸ் அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் அணி மோதியது.


முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென்தோமஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றனர்.

அவ்வணி சார்பில் சுவிதா 2 ஓட்டங்களையும் றொசானா, சிலக்சனா ஆகியோர் தலா ஒவ்வொரு ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

5 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனக் களம் இறங்கிய அல்வாய் நக்கீரன் அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றனர்.

அவ்வணி சார்பில் ஜெனோசா ஒரு ஓட்டத்தை பெற்றுக் கொடுத்தார். (4-90)

# பஞ்சாப் அணியிடம் வீழ்ந்தது சென்னை



ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 38 ஆவது லீக் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணியும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 187 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது.

இதனைத் தொடர்ந்து 188 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், பஞ்சாப் கிங்ஸ் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 59 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 9 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 88 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஷிகர் தவான் தெரிவு செய்யப்பட்டார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2602

**கில்டன்**

காலைல தான் பெட்ரோல் போட்டன் அதுக்குள்ள திரும்ப போட சொன்னா நான் என்ன பண்றது...



30 ரூபாய்க்கு போட்டு உனக்கு 300 கிலோ மீற்றர் போகனுமா?

**அலைக்கசன்**

குளிர் காலத்தில் ஃப்ரிட்ஜிக்குள் இருக்கும் ஃபீலிங்கை தரும் வீடு தான்...



வெயில் காலத்தில் தந்தூரி அடுப்பில் இருக்கும் ஃபீலிங்கையும் தருகிறது...

**அனுசியா**

ஒண்ணுமே இருக்காதுனு தெரிஞ்சும் நான் அடிக்கடி open பண்ணி close பண்றது... ஒன்னு எங்க வீட்டு fridge இன்னொன்னு என்னோட whatsapp



**அபிராம்**

இன்னையிலயிருந்து எப்படியாச்சும் காசு சேக்கனும்னு நினைக்கிற அன்னைக்கே பெருசா செலவு வரும் பாருங்க....



அதுக்குப் பேர்தான் வாழ்க்கை

**சுதர்சினி**

ஒருவருடைய மனதில் இருக்கும் வலிகளையும் வேதனைகளையும் ஒரு போதும் அடுத்தவர்களால் உணர முடியாது....

**டயனா**

டிவியும் பொண்டாட்டியும் ஒண்ணுதானுங்கோ...



அவங்க பேசுவாங்க நாம பார்க்கலாம் கேட்கலாம். ஆனா அது கிட்ட திரும்பி பேச முடியாது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

## தரம்– 05 புலமைப்பரிசில் பரீட்சை – 2021 (2022)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

### வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள்




**இடமிருந்து வலம்–**

**1ம் வரிசை -** பி.அபிகாஷ்-167, க.ஹானுசன் -162 , ம.ஜீவிதன் -160, த.அக்சஜன் -169, திருமதி. R.J.செல்வராசா (ஆசிரியை) திருமதி. கி.அரியதாசன் (ஆசிரியை) ,திருமதி.வ.பத்மானந்தன் (ஆரம்பக் கல்வி உதவி அதிபர்),திருமதி. ஜெ.தனபாலசிங்கம் (அதிபர்), திரு. க.உதயசீலன் (பிரதி அதிபர்), திருமதி. இ.சுந்தரமூர்த்தி (பிரதி அதிபர்), திருமதி. ச. செல்வராசா (ஆசிரியை), திருமதி. ப. கஜேந்திரன் (ஆசிரியை), ச.விதுசா-150, சு.சுவாதித்யா-176, கௌ. அருணிஷா-174, சு. அஸ்விதா-155.

**2ம் வரிசை -** மு.சயுவினி-157, உ.தாரன்யா-159, ஸ்ரீ.புகழினி- 163, ஆ.கிறேனியா- 160, க.றொசானா-155, சு.கோபிதா-149, சி.நிரோசி-154, த.அபினா-159, சு.யதுசனா-171, பி.சாலவி-153, மு.ஷயுகா-182, பி.பவநயனி-164, சி.சஞ்சனா-156, அ.யாதவி-161, ச.தியார்த்திகா-166, ப.திஷானி-149, சு. தேன்கனி-173.

**3ம் வரிசை -** த.தருஜன்-154, சு.அஸ்வின்-151, அ.கோவர்த்தன்-165, ந.சாருஜன்-171, ஜீ.புகழினியன்-158, சு.அக்ஷிதா- 165, ஜெ.ஸ்ரீஅமிர்தவி-165, அ.சஸ்மிதா-160, நி.கேசகி-161, பா.தனந்தினி-167, ஜெ.கிரிஷரன்-175, ப.துஷாரத்-175, லி.தஷ்வின்-193, சி.ஆரூரன்-184.

**4ம் வரிசை -** லூ.யனுஸ்கன்-179, பி.டிலக்சன்-178, ற.சுஜானன்-161, சி.பவிஷ்சன்- 168- அ.சங்கீத்-162, வ.அஜிறாம்- 168, க.தபோதரன்-175, சி.கனுஜன்-157, வி.ஹிசாந்- 165, பா.பாவழகன்-150, பி.குயலகவி-164, ச.அஸ்மிதன்-167, சு.சுகேசன்-171.

### 100– 147 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள்




இம் மாணவர்களின்
உயர்விற்காக
வழிப்படுத்திய அதிபர்,
ஆரம்பக்கல்வி உதவி அதிபர்,
ஆசிரியர்கள்
அனைவரையும்
நன்றி கூறுவதில்
பெருமையடைகின்றோம்.

(கி-4245)

விளம்பர அனுசரணை

Sun Furniy City, A9 Road, Kilinochchi.

Elanthulir Electronics A9 Road Kilinochchi.

Hare Krishna Hardware Kanagapuram Road,Kilinochchi.

வாழ்த்துவோர்:

தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்,
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்து தொடர்பில் விழிப்புணர்வு தேவை

## சுகாதார மருத்துவ அதிகாரி

(சாவகச்சேரி)

வீதி விபத்து தொடர்பாக மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தாத பட்சத்தில் விபத்து மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.சுதோகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இடம்பெற்ற விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்றைய சமூகத்தில் டெங்கு மரணம், கர்ப்பிணி மரணம், சிசு மரணம் என்றால் பெரிய பேசுபொருளாக காணப்படுகிறது. ஆனால் வீதி விபத்துக்களை எவரும் பெரிதாக கணக்கில் எடுப்பதில்லை.

சில வேளைகளில் எமது பகுதியில் மாதத்திற்கு 10-15 பேர் வரை வீதி விபத்தில் மரணிக்கின்றனர். அண்மையில் கூட மிருசுவில் ரயில் கடவை ஒன்றில் பாரிய விபத்து. அந்தக் கடவையில் இதுவரை 5 பேர் ரயில் மோதி மரணமடைந்துள்ளனர். இது தொடர்பான விழிப்புணர்வு மிக அவசியம்.

தென்மராட்சி அபி விருத்திக் கழகம் இவ்வாறான நடவடிக்கைகளிலும் முன்னின்று செயற்பட்டு தேவையற்ற மரணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-30)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ முருகுப்பிள்ளை- மௌன குரு கடவுள் சுவாமிகளின் 114 வது ஜெயந்தி விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் உள்ள ஆலயத்தில் கொண் டாடப்படும் அன்றைய தினம் பூஜைகளும் ஆராதனைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (4)

## காணி அளவிட வருகை தந்த நில அளவை திணைக்களம்

### பொதுமக்கள் எதிர்ப்பால் திரும்பிச்சென்றனர்



(அராலி)

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை தெற்கு , பொன்னாலை சந்திக்கு அண்மையில் ஜே/ 170 கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றினை அளப்பதற்கு நில அளவை திணைக்களம் வருகை தந்தது.

முத்துக்குமாரசாமி விநாசித்தம்பி என்பவரது எட்டு பரப்புக் காணியில் இலங்கை கடற்படையினர் கடற்படை முகாமை அமைத்து இருந்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த காணியை நில அளவீட்டை மேற்கொள்வதற்காக நில அளவைத் திணைக்களம் வருகை தந்த நிலையில் காணி உரிமையாளர், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இதனை அடுத்து குறித்த காணியினை அளவீடு செய்ய முடியாத நில அளவை திணைக்களம் காணி உரிமையாளரிடமும் அங்கு எதிர்ப்பில் ஈடுபட்டவர்களிடமும் கடிதத்தினை வாங்கிய பின்னர் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (4-104)

## அதிபரை இடமாற்ற வேண்டாம்

### பழைய மாணவர்கள், பெற்றோர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் - காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கூறி அந்த பாடசாலையின் பழைய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று பாடசாலைக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த அதிபர் பாடசாலைக்கு வந்தது தொடக்கம் அவர் மாணவர்களது நலன்கள் மீது காட்டுகின்ற அக்கறை, மாணவர்கள் மீதான அணுகுமுறை மற்றும் பாடசாலையின் தலைமைத்துவம் என்பனசிறப்பாகக்காணப்படுவதால் அவரை இடமாற்றம் செய்ய வேண்டாம் எனக்கூறி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

கவனயீர்ப்பின் பின்னர் வலயக்கல்வி பணிமனைக்கு கடிதம் ஒன்று கையளிக்கப் போவதாகவும் 5 நாட்களுக்குள் தகுந்த பதில் தரவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுக்கப்போவதாகவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த அதிபர் பாடசாலைக்கு வந்த பின்னர் வரலாற்றில் முதல் தடவையாக மாணவர் ஒருவர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-104)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் 45 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில், ஓய்வு நிலை ஆயரும் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு தலைவருமான கலாநிதி சு.ஜெபநேசனின் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

(படங்கள்- சிவசாந்தன், ரவிசாந்)

## இராசிபலன்

27.04.2022
சித்திரை 14, புதன்கிழமை
துவாதசி பின்னிரவு 2.07 மணிவரை

பூரட்டாதி முன்னிரவு 6.49 மணிவரை
சுபநேரம் - 4.29-5.59 மணிவரை
இராகுகாலம் -11.59-1.29 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்-
பூசம், ஆயில்யம்

வளவன்

**மேஷம்** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணி புரியும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர்.

**கடகம்** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** சிலர் உங்களிடம் தொழில் ரீதியாக உதவி கேட்டு வரலாம், கனிவாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**சிம்மம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தூரதேசத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடி கொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மீனம்** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாய்ந்தமருது குண்டு வெடிப்புச் சம்பவம்

# உயிரிழந்தவர்களின் சடலங்களை தோண்டி எடுக்க நீதிமன்றம் அனுமதி

(அம்பாறை)

2019 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருது வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் பூதவுடல்கள் இன்று தோண்டி எடுக்கப்படவுள்ளன.

தற்கொலை தாக்குதலில் உயிரிழந்த 17 பேரில் சாரா ஜாஸ்மின் என்கிற புலஸ்தினி மகேந்திரன் உள்ளாரா என்பதை அறியவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சஹ்ரான் ஹாஷிமின் சகோதரர் மொஹமட் ரில்வான் தற்கொலை அங்கியை வெடிக்கச் செய்ததில் குழந்தைகள் உட்பட 17 பேர் உயிரிழந்ததாக பொலிஸார் அறிவித்தனர்.

இருப்பினும், அந்த நேரத்தில் டி.என்.ஏ. சோதனைகள் சம்பவ இடத்தில் சாரா ஜாஸ்மின் இருப்பதை உறுதிப்படுத்தவில்லை.

முந்தைய இரண்டு முறை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சாரா ஜாஸ்மினுடைய டி.என்.ஏ ஒத்துப்போகாததை அடுத்து எச்சங்களை மீண்டும் ஒருமுறை தோண்டி எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் சடலங்களை இன்று அம்பாறை மயானத்தில் தோண்டி எடுக்க பொலிஸாருக்கு கல்முனை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (நி)

# தொலைபேசி, இணைய கட்டணங்கள்; விரைவில் அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

தொலைபேசி மற்றும் இணைய கட்டணங்கள் விரைவில் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பு கோபுரங்களை பராமரிக்கத் தேவையான ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு எரிபொருள் நுகர்வு தேவைப்படுவதாகவும், எரிபொருள் விலை அதிகரிப்பு தொலைத்தொடர்பு துறையிலும் நேரடி மற்றும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அந்த நிறுவனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ரூபாய்க்கு நிகரான டொலரின் மதிப்பு உயர்வால், தொலைத்தொடர்பு நிறுவனங்களின் இயக்கச் செலவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், தகவல் தொடர்பு மையங்களுக்குத் தேவையான அனைத்து கருவிகளும் இறக்குமதி செய்யப்படுவதால், இணைப்புகளைப் பராமரிப்பதில் கூடுதல் செலவுக்ள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி)

# விலையை அதிகரிக்காமல் எரிவாயுவை விநியோகிக்க முடியாது

## லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

சமையல் எரிவாயு விலைகளை அதிகரிக்காமல் எரிவாயுவை விநியோகிக்க முடியாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

எனவே, விலை அதிகரிப்பு தொடர்பாக அரசாங்கம் முடிவெடுக்க வேண்டுமென அந்த நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

12.5 கிலோ கிராம் நிறை கொண்ட சமையல் எரிவாயுவின் விலையை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்திருந்தது.

எனினும் அந்த விலை அதிகரிப்பை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கவில்லை என அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பதவியேற்க மாட்டேன்



(கொழும்பு)

இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பதவியேற்க தாம் தயாரில்லை என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போது பெரும்பான்மையை இழந்துள்ள தாகவும் மேலும் பாராளு மன்றத்தில் கட்சித் தலைவர்களின் சம்மதத்துடன் புதிய பிர தமரை நியமிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்பதைவிட அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே சிறந்தது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)



இடைக்கால அரசாங்கத்தை அமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதை விட அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதே சிறந்தது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கண்டியில் இருந்து கொழும்பு வரையிலான பேரணியில் கலந்துகொள்வதற்கு முன்னர் அஸ்கிரிய மகாநாயக்கர் வரகாகொட ஞானரதன தேரரை பார்வையிட்டதன் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "தற்போதைய பாராளுமன்றத்தின் அமைப்பு எப்படி உருவானது என்பதை நாம் பார்க்க வேண்டும். 69 இலட்சம் மக்களின் விருப்பத்தால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அறுபத்தொன்பது மில்லியன் மக்கள் அரசாங்கத்திற்கு 140 இடங்களுக்கு மேல் கொடுத்துள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை அல்லது பதவி நீக்கம் என்பது வேறு அரசுகளை உருவாக்குவது வேறு.

இளைஞர்கள், சிவில் சமூகங்கள் மற்றும் முதியோர்கள் காலிமுகத்திட லிலும் நாட்டின் பல பகுதிகளிலும் ஒன்று கூடி ஜனாதிபதி மற்றும் பிரதமரை அரசாங்கத்தை விட்டு வெளியேறுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒப்பந்தங்களால் அல்ல, மக்கள் ஆணையின் மூலம் நாட்டைக் கைப்பற்ற நாங்கள் தயாராக உள்ளோம் என சஜித் தெரிவித்தார். (நி)

# போராட்டக்காரர்களால் உருவாக்கப்பட்டது இன்னுமொரு கிராமம்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகைக்கு எதிரில் போராட்டக்காரர்கள் சில தினங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதில் [illegible] அமைத்து[illegible] கம என பெயரிட்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 18 சூரி 4 செவ் 12 இல்<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில் BSc பட்டதாரி கணித ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியரும் சைவ போசனமும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12538 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 32½ சூரி 1 செவ் 5<br>உயரம்: 159 cm<br>தகைமை/தொழில்:BSc IT 2 ஆம் வருட மாணவி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு ஆயின் கனடா, லண்டன், அவுஸ்திரேலியா உள்நாடு என்றால் பொறியியலாளர் அல்லதுவைத்தியர்<br>தொ.இ:G/12595 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 38½ சூரி 6 செவ் 9 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: பொது சுகாதார பரிசோதகர் (P.H.I)<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12540 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: சூரி 4 செவ் 1 இல்<br>உயரம்: 168 cm<br>தகைமை/தொழில்: சுவிஸில் பிறந்து படித்து அங்கே வேலை செய்கிறாா்<br>எதிர்பார்ப்பு: சுவிஸ் மட்டும்<br>தொ.இ:G/12597 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 10½ சூரி 4 செவ் 5<br>தகைமை/தொழில்:H.N.D.E AIT Electrical Srilanka Telecom Assistant (To)<br>எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12541 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 36¾ சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்:H.N.D.E BA Following ஆங்கில ஆசிரியர் எதிர்பார்ப்பு பட்டதாரி தனியார் அரச உத்தியோகம்<br>தொ.இ:G/12598 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்: N.I.I.T (கொழும்பு தனியார் கொம்பனியில் வேலை<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/12544 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 26 சூரி 2 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: Masters in HRM Human Resources Executive - தனியார்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு<br>தொ.இ:G/9420 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 30

# நல்லவற்றை கற்போம்: கற்றுக்கொடுப்போம்



ஒரு கால் இல்லாத இளைஞன் ஒருவன். அம்மாவுடன் வசித்து வருகிறான்.
கால் இல்லாத ஊனமும் தனிமையும் அவனை வாட்டும்.
ஒரு சமயம், அம்மாவோடு பேருந்தில் போகும்போது லேடீஸ் சீட்டில் உட்கார்ந்திருப்பான்.
ஒரு பெண்மணி அவனைக் கண்டபடி திட்டுவாள்.
அவன் உடனே எழ, அவனுக்கு கால் இல்லாததைப் பார்த்து திட்டியவள் “சாரி” கேட்பாள்.
அது அவனுக்குப் பெரிய துயரத்தைத் தரும்.
ஒரு கட்டத்தில் அவன் தற்கொலை செய்ய முடிவெடுத்து, வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள தண்டவாளத்தில் போய் படுத்துக் கிடக்கிறான்.
ரயில் வருகிற நேரம்...
ஒரு “குஷ்டரோகி” யாசகன் அந்த இளைஞனை பார்த்து ஓடி வந்து காப்பாற்றி விடுகிறான்.
பின், பக்கத்தில் இருக்கும் ஒரு மண்டபத்துக்கு அழைத்துப் போய் அந்த இளைஞனிடம் சொல்கிறான், “நான் ஒரு குஷ்டரோகி... எப்பிடி இருக்கேன்னு பார்த்தியா... இப்படி தான் அன்னைக்கு கூட ரயில்ல விழப்போன ஒரு குழந்தையைக் காப்பாத்தினேன்... அந்தம்மா வந்து குழந்தையை வாங்கிட்டு நன்றி சொல்லாம என்னைத் திட்டிட்டுப் போனாங்க... அவ்வளவு அருவருப்பா இருக்கேன் நான். அப்படிப்பட்ட நானே உயிரோட இருக்கும் போது... உனக்கெல்லாம் என்ன இந்த கால் ஊனம் பெரிய குறையா?...’ என அறிவுரை கூறி அந்த இளைஞனின் நம்பிக்கையை தூண்டி விடுகிறான்.
தற்கொலை முயற்சியை விட்டுவிட்டு வாழ்க்கையின் மீதான புதிய நம்பிக்கைகளோடு தூங்குகிறான் ஊனமுற்றவன்.
காலையில் பார்த்தால் தண்டவாளத்தில் ஒருவன் விழுந்து செத்துக் கிடந்தான்.
அந்த இளைஞன்தான் இறந்துபோய் விட்டான் எனப் பயந்து ஓடி வருகிறாள் ஊனமுற்ற இளைஞனின் அம்மா.
“அம்மா... நான் இருக்கிறேன் அம்மா...” என அந்த இளைஞன் கத்திக்கொண்டே வருகிறான்.
ஆனால், அங்கே அந்த குஷ்டரோகி யாசகன் இறந்து கிடந்தான்.
முந்தைய இரவு அந்த இளைஞன் தூங்கிய பிறகு அந்த யாசகன் “இப்படிப்பட்ட ஒருவனே இந்த சமூகத்தில் வாழக் கூச்சப்பட்டு சாக நினைக்கிறான்... நாம இவ்வளவு அவமானங்களுக்கு நடுவிலே இப்படி வாழ்கிறோமே...” என யோசித்ததினாலோ என்னவோ தண்டவாளத்தில் குதித்திருப்பானோ என எண்ணினான்.
செத்துப்போன குஷ்டரோகியை பார்த்து அந்த இளைஞன் சொல்கிறான், ”அம்மா...! அவன் எனக்கு வாழக் கத்துக்கொடுத்தான்... நான் அவனுக்கு சாகக் கத்துக் கொடுத்துட்டேன்...!” என கதறி அழுகிறான்.
ஆகவே நாம், நம் சக மனிதர்களுக்கு எதைக் கற்றுத் தரப்போகிறோம் என்பதில்தான் இருக்கிறது நம் வாழ்க்கையின் அர்த்தம்!

# அணு அ...

## உலக நாடுகளு...

(மொஸ்கோ)

**அணு ஆயுதப் போருக்கான கணிசமா... இந்த அபாயத்தை குறைத்து மதிப்... விடுத்துள்ளது.**

நாங்கள் அணு ஆயுதப் போரை தவிர்க்கவே விரும்புகிறோம். எனினும் உக்ரைன் கிழக்கில் நடைபெறும் போரில் மேற்கத்தேய ஆயுதங்களின் குவிப்பு ஆத்திரமூட்டும் வகையில் அமைந்துள்ளது என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜிலாவ் ரோவ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அணு ஆயுதப் போருக்கான ஆபத்துகள் கணிசமாக உள்ளன என நேற்று முன்தினம் ரஷ்ய அரசு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்தார்.

உக்ரைனை ஆதரிக்கும் உலக நாடுகளை மிரட்டுவதற்கான துருப்புச் சீட்டாக அணு ஆயுதப் போர் எச்சரிக்கையை தற்போது ரஷ்யா கையில் எடுத்துள்ளது.

இது ரஷ்யாவின் தோல்வியை குறிக்கிறது என செர்ஜி லாவ்ரோ...

## 44 பில்லியன் டொலர்களுக்கு டுவிட்டரை வாங்கினார் எலான்



(வோஷிங்டன்)

பிரபல சமூக வலைதளங்களில் ஒன்றான டுவிட்டரை வாங்குவதற்கு உலக பணக்காரரும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனருமான எலான் மஸ்க் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில், அவர் டுவிட்டர் நிறுவனத்தின் 100 சதவீத பங்குகளையும் வாங்குவதற்கு முன்வந்தார்.

இந்நிலையில், எலான் மஸ்கிற்கு 44 பில்லியன் டொலர்களுக்கு விற்பனை செய்ததை டுவிட்டர் நிறுவனம் உறுதி செய்துள்ளது. (நி)

## இ... மூ...



(டில்லி)



## அணுச... அதிகரி...

(பியாங்யாங்)

இராணுவத்தை நிறுவியதைக் குறிக்கும் வகையில், பிரமாண்ட இரவு நேர இராணுவ அணிவகுப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத போர் மூளும்!

## ளுக்கு எச்சரிக்கை விடுத்தது ரஷ்யா

**ணிசமான அபாயங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள ரஷ்யா, மதிப்பிட வேண்டாம் என உலக நாடுகளுக்கு எச்சரிக்கை**



வின் நேர்காணலுக்குப் பின்னர் இது குறித்துக் கருத்து வெளியிட்ட உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

1945 இற்குப் பிறகு ஒரு ஐரோப்பிய நாடொன்றின் மீதான மிகப் பெரிய தாக்குதலாக உக்ரைன் மீதான ரஷ்யாவின் இரண்டு மாதப் படையெடுப்பு அமைந்துள்ளது.

இந்தப் போரில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் காயமடைந்தனர். பல உக்ரைன் நகரங்கள் ரஷ்ய தாக்குதல்களால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

மேலும் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனினும் மரியுபோல் தவிர பெரிய நகரங்களை ரஷ்யாவால் இதுவரை கைப்பற்ற முடியவில்லை. உக்ரைனியப் படைகளின் கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டுவரும் ரஷ்யப் படைகள், தலைநகர் கீவ் புறநகரில் இருந்து பின்வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தலைநகர் கீவ்வை கைப்பற்றும் முயற்சி வெற்றியளிக்காததை அடுத்து கடந்த வாரம் டான்பாஸ் எனப்படும் கிழக்கு மாகாணங்களைக் கைப்பற்றும் முயற்சியுடன் ரஷ்யா பாரிய தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

இது வெற்றியடைந்தால் கிழக்கில் ரஷ்ய சார்பு பிரிவினைவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுடன் 2014 ஆம் ஆண்டு கைப்பற்றிய சிரிமியா தீபகற்பத்தை இணைப்பதற்கான வழி ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# இராணுவ செலவீனங்கள் மூன்றாவது இடத்தில் இந்தியா



(டில்லி) இராணுவ செலவினங்களை மேற்கொள்வதில் இந்தியா உலகளவில் மூன்றாவது இடத்தில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுவீடன் நாட்டில் ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆய்வு மையம் உலக நாடுகளின் இராணுவத்திற்கான செலவினங்கள் குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி, "கடந்த 2021ஆம் ஆண்டு நிலவரப்படி உலகின் இராணுவச் செலவுகள் 2.1 ட்ரில்லியன் டொலர் அளவை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இது அதற்கு முந்தைய ஆண்டை விட 0.7 சதவீதம் அதிகமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், உலக நாடுகளில் இராணுவத்திற்கு செலவினங்களை மேற்கொள்வதில் அமெரிக்கா முதல் இடத்திலும், சீனா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# உலகின் மிகவும் வயதான நபர் ஜப்பானில் காலமானார்



(டோக்கியோ) உலகின் மிகவும் வயதானவர் என்ற பெருமை பெற்ற ஜப்பானின் புகுவோகா நகரைச் சேர்ந்த மூதாட்டியான கேன் தனகா கடந்த 19 ஆம் திகதி தன்னுடைய 119 ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

1903 ஆம் ஆண்டு ஜனவரி 2 ஆம் திகதி பிறந்த கேன் தனாகா, கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தன்னுடைய 116 ஆவது வயதில் மிகவும் வயதான நபர் என்ற கின்னஸ் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சக்தியை அதிவேகத்தில் ரிப்போம்-வடகொரியா சபதம்

நிறு வகை வு நேர குப்பை வடகொரியா நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற அணிவகுப்பில் வடக்கின் மிகப் பெரிய மற்றும் புதிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான Hwasong-17 காட்சிப்படுத்தப்பட்டதாக மாநில ஊடகங்கள் தெரிவித்தன.

கிம் இல் சுங் சதுக்கத்தின் குறுக்கே ஏராளமான படை வீரர்கள் அணிவகுத்துச் செல்வதையும், சிலர் போர் சீருடைகளில் அணிவகுத்துச் செல்வதையும், மற்றவர்கள் குதிரைகளில் ஏறிச் செல்வதையும், கிம் வெள்ளை சம்பிரதாய கோட் அணிந்து படை வீரர்களுக்கு உற்சாகமாக கை அசைப்பதையும் அரசு ஊடகங்கள் வெளியிட்ட படங்கள் காட்டுகின்றன.

இதன்போது கருத்துத் தெரிவித்த வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், 'எங்கள் நாட்டின் அணுசக்தி திறன்களை மிக வேகமாக வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் நாங்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுப்போம்.

• நாட்டின் அணுசக்தி சக்தி அளவு மற்றும் வலுப்படுத்துவதைத் தொடர நடவடிக்கை எடுக்கப்படும்.

வட கொரியாவின் அடிப்படை நலன்கள் தாக்கப்பட்டால் அவை பயன்படுத்தப்படலாம்' என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புலம்பெயர் மக்கள்

# இலங்கையில் முதலீடு செய்ய வாய்ப்புக்கள் உருவாக்கி கொடுக்கப்படும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(அராலி)

**வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு இலங்கையில் முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளதாக வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைத்து முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் பொருட்டு அரசாங்கம் 11 அம்ச கொள்கைத் திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது.

மேலும் வடமாகாணத்தில் இரண்டு வருடத்தில் விவசாயத்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதுமட்டுமல்லாது பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்கள், கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், முதியவர்கள், சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் நிரந்தர வாழ்விடங்களை அற்றவர்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

வடக்கில் எரிபொருள் விநியோகம், அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் என்பவற்றை தடையின்றி வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது. தீவகப் பகுதிகளின் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்ற நிலையில் அரச சேவையின் மூலம் மக்களிடமே தேடிச் சென்று குறை தீர்க்கும் கலாசாரம் மேலும் அதிகரிக்கப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-104)

# 40 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று நெத்தலி ஆற்றுப் பகுதியில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை சோதனையிட்ட போது அவர்களிடம் இருந்து 40 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. அத்துடன் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்தார். (4-316)

# கௌதாரிமுனையில் அமைக்கப்பட்ட கடலட்டை பண்ணை அகற்றம்

கிளிநொச்சி கௌதாரி முனையில் அமைக்கப்பட்ட சீன கடலட்டைப் பண்ணை திடீரென அகற்றப்பட்டது. இலங்கை சீன கூட்டு நிறுவனமான குயிலான் நிறுவனத்தினால் கௌதாரி முனையில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணை தொடர்பாக அரசியல் வாதிகள் முதல் அனைவராலும் பேசப்பட்டது. குறித்த அட்டைப்பண்ணைக்கு பிரதேச மக்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்தனர். கடற்றொழில் அமைச்சர் குறித்த அட்டைப்பண்ணை கடலட்டை பண்ணையாளர்களின் அட்டைக்குஞ்சு தேவைக்கு மாத்திரம் என தெரிவித்திருந்தார். கடலை ஆக்கிரமிக்க விடுவதில்லை என மக்களிடம் தெரிவித்திருந்தார்.

எனினும் திடீரென குறித்த அட்டைப்பண்ணை அகற்றப்பட்டதிற்கான காரணம் தெரியவில்லை. (4-316)

# கிளிநொச்சியில் நுங்கு அருந்திய அமெரிக்கத் தூதுவர்



(முறிகண்டி)

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நுங்கு அருந்திய காணொளி வைரலாகியுள்ளது. நேற்று முகமாலைக்கு விஜயம் மேற் கொண்டிருந்த அவருக்கு நுங்கு வழங்கப்பட்டது.

அதனை அவர் மகிழ்வுடன் அருந்தும் காட்சிகள் வைரலாகி வருகின்றன. (4-100)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

திருநெல்வேலி ஸ்ரீபத்திர காளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் பதினெட்டுத் தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெரு விழாவில் அடுத்த மாதம் 14 ஆம் திகதி சனிக்கிழமை சப்பைரத உற்சவமும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், இரவு கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-18)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நடைபெறவுள்ளது. மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-18)

# மன்னாரில் பட்டப்பகலில் பெண்ணின் சங்கிலி அறுப்பு

(மன்னார்)

மன்னார் இலங்கை வங்கிக்கு அருகாமையில் பெண் ஒருவரின் சங்கிலி இனம் தெரியாத நபர்களால் அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்றுள்ளது. உப்புக்குளம் பகுதியை நோக்கி பயணித்த பெண் ஒருவரின் பின்னால் இருந்து நகை அறுக்கப்பட்ட நிலையில் சந் தேக நபர் தப்பிச்சென்றுள்ளார்.

சம்பந்தப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அண்மைக் காலமாக மன்னார் நகரப் பகுதிகளில் வீடுகள் உடைக்கப்படும் சம்பவங்களும் திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-285)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 400 | 280 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 200 | 250 |
| தக்காளி | 280 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 140 | 120 | 120 |
| கோவா | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 180 | 150 | 180 | 200 |
| பூசணி | 80 | 60 | 60 | 80 |
| புடோல் | 200 | 160 | 160 | 200 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 100-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 160 | 200 |
| பாகற்காய் | 400 | 600 | 450 | 400 |
| வெண்டைக்காய் | 200 | 200 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 180 | 340 | 200 | 160 |
| லீக்ஸ் | 140 | 180 | 150 | 160 |
| பீற்றூட் | 160 | 160 | 100 | 200 |
| கறிமிளகாய் | 200 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 700 | 1200 |
| போஞ்சி | 400 | 400 | -- | 480 |
| கத்தரிதம்புள்ள | 320 | 350 | -- | 320 |
| கீரை – 1 பிடி | 120 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-70 | 60-80 |
| இராசவள்ளி | 180 | 180 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 350 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 240 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |



வடக்கிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் நேற்று முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டார். அமெரிக்க கொடையாளர்களின் நிதி உதவியில் முகமாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டார்.

(படம் - சப்தசங்கரி,தேவானந்தன், யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப கிருது வருஷ புத்தாண்டுப் பலன்கள்

## யோசித்து செயற்பட வேண்டிய நேரம்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



(சித்திரை 3, 4 பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள் வரை)

பெயரின் முதல் எழுத்துக்கள்: ர, ரு, ரே, த, தி, து, தே உள்ளவர்களுக்கும்.

**துலாம் இராசி வாசகர்களே!**

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் சஞ்சரிக்கின்றார்கள். எனவே முழுமையாக சர்ப்பக் கிரக ஆதிக்கம் இருக்கிறது. எனவே வாழ்வில் ஏற்றமும், இறக்கமும் மாறி மாறி வந்துசேரும். மனக் குழப்பம் அதிகரிக்கும். குருவின் வக்கிர காலத்தில் நற்பலன்கள் அதிகமாகக் கிடைக்கும்.

**புத்தாண்டின் தொடக்க நிலை**

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன், பஞ்சமஸ்தானத்தில் சப்தமாதிபதி செவ்வாயோடு இணைந்திருக்கிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய பொறுப்புகள் வந்துசேரும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். பயணங்கள் பலன் தரும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.

பூமி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பலமடங்கு இலாபம் கிடைக்கலாம். ஆபரண சேர்க்கை உண்டு. ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் இருப்பதால் கால சர்ப்ப தோஷம் உள்ளது. எனவே இனம் புரியாத கவலை மேலோங்கும். எடுத்த காரியங்களை முடிப்பதில் தடைகள் அதிகரிக்கும். இருப்பினும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும். அதிகபட்சமான உழைப்பு உண்டு. ஆனால் அதற்கு ஏற்ற விதத்தில் ஆதாயம் கிடைக்காது.

உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைப்பது போல் தோன்றி, கைநழுவிச் செல்லும். இதுபோன்ற காலங்களில் ராகு - கேதுகளுக்கு முறையான பரிகாரம் செய்தால், அதன்பிறகு நன்மைகள் படிப்படியாக நடைபெறும்.

ஆண்டின் தொடக்கத்தில் சனி பகவான், அர்த்தாஷ்டமச் சனியாக செயற்படுகிறார். இதற்கு அஷ்டமத்துச் சனியில் பாதிப் பங்கு வலிமை உண்டு. சுகக்கேடுகள் வரலாம். சொல்லைச் செயலாக்க முடியாமல் தத்தளிப்பீர்கள். நண்பர்களை பகைத்துக்கொள்ள வேண்டாம். உடல்நலனில் சிறிய அச்சுறுத்தல் ஏற்பட்டாலும், உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. பிறரை சார்ந்திருக்க வேண்டிய சூழல் உருவாகும்.

6 ஆம் இடத்தில் குரு சஞ்சரிக்கின்றார். 'ஆறில் குரு, ஊரில் பகை' என்பார்கள். எனவே எந்த நேரத்திலும் எதிர்ப்புகள் வரலாம். அது இல்லமாகவும் இருக்கலாம், பணிபுரியும் இடமாகவும் இருக்கலாம். குரு பார்வை இரண்டில் பதிவதால், காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். புதிய வழக்குகளை சந்திப்பீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்கள் மீது வீண்பழி விழலாம்.

சந்திரனை செவ்வாய் பார்ப்பதால் 'சந்திர மங்கள யோகம்', சுக்கிரனோடு செவ்வாய் இருப்பதால் 'சுக்கிர மங்கள யோகம்', சூரியனோடு புதன் இணைந்திருப்பதால் 'புத ஆதித்ய யோகம்' செயற்படுகிறது. அதோடு 'சகட யோகமும்' இருக்கிறது. இத்தனை விதமான யோகங்களும் இருக்கும் புத்தாண்டில், மகிழ்ச்சி அதிகரிக்க, மனக் கவலை மாற வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

திசாபுத்திக்கேற்ற தெய்வங்களை தேர்ந்தெடுத்து வழிபட்டால் நன்மைகள் நாளும் வந்துசேரும்.

**குருவின் பார்வை பலன்**

ஆண்டின் தொடக்கத்தில் மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகிறது. குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். கொடுக்கல்- வாங்கல் சீராகும்.

கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் துரிதமாக நடைபெறும். கல்யாணப் பேச்சுவார்த்தை கைகூடும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள்.

வள்ளல்களின் ஒத்துழைப்பும், வங்கிகளின் ஒத்துழைப்பும் கிடைத்து வளமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள முன்வருவீர்கள். தொழில் முயற்சியில் இருந்த தடைகள் அகலும். உத்தியோகம் சம்பந்தமாக நேர்முகத் தேர்விற்குச் சென்று வந்




திருந்தால், அந்த வேலை கிடைக்கும். தொழில் செய்பவர்களுக்கு, புதிய ஒப்பந்தங்கள் வரலாம். விலகிச் சென்ற பங்குதாரர்கள் மீண்டும் வந்து சேருவர். 12 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் போன்றவை ஏற்படலாம். சுபவிரயங்கள் அதிகரிக்கும். வாழ்க்கைப் பாதையில் இருந்த தடைக் கற்கள் அகலும்.

**சனியின் வக்கிரமும், பெயர்ச்சிக் காலமும்**

25.5.2022 முதல் 9.10. 2022 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகிறார். சனியின் வக்கிர காலத்தில் ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் உண்டு. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும்.

தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. பயணத்தால் விரயம் உண்டு. 29.3.2023 இல் நடைபெறும் சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு, கும்பச் சனி உங்களுக்கு நன்மைகளைச் செய்யும்.

தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பொருளாதார நிலை உயரும். தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் நிரந்தரப் பணிக்கு மாறுவர். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகும். பாகப்பிரிவினைகள் கூட சுமுகமாக முடியலாம்.

**வளர்ச்சி தரும் வழிபாடு**

வருடம் முழுவதும் நன்மை கிடைக்க செவ்வாய்க்கிழமை தோறும் வராகி அம்மன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் இருந்தே சர்ப்பக்கிரக ஆதிக்கம் இருக்கிறது. எனவே இன்பமும், துன்பமும் கலந்தே வாழ்க்கை பயணிக்கும். உறவினர்கள், சுற்றத்தாரிடம் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். கணவன் - மனைவி, ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே வாழ்வில் அமைதி காண இயலும். விரயங்கள் கூடும். வருமானப் பற்றாக்குறை ஏற்படும்.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். உத்தியோக மாற்ற சிந்தனை மேலோங்கும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## பேசும் கிளி

வேம்பூரில் வேலப்பன் என்ற பணக்காரன் இருந்தான். அவன் தன்னை மிஞ்சிய பணக்காரனோ அறிவாளியோ அவ்வூரில் கிடையாது என எண்ணி வந்தான். வெளியூர் போனால் அங்கு கண்ட அதிசயப் பொருளை வாங்கி வந்து தன் ஊராரிடம் காட்டி அது போன்ற பொருள் அவ்வூரில் வேறு யாரடமும் இல்லை என்று கர்வத்தோடு கூறி வருவான்.

ஒருநாள் யாரோ ஒருவன் அவனிடம் "நம் ஊர் ராமப்பனிடம் பேசும் கிளி இருக்கிறதே. அது போல் உங்களிடம் இருக்கிறதா?" என்று கேட்டான். வேலப்பனும் "பேசும் கிளியா? அப்படி ஒன்று உலகில் இருப்பதாக நான் கேள்விப்பட்டதே இல்லையே" என்றான்.

அதற்கு அந்த மனிதன் "இருக்கிறது. ராமப்பன் வீட்டிற்குப் போய்ப் பாருங்கள் அப் போது தெரியும்" என்று கூறி விட்டுப் போனான்.

வேலப்பன் உடனே ராமப்பன் வீட்டிற்குச் சென்றான். அப்போது ராமப்பன் தன் வீட்டுக்கு கொல்லையில் இருந்ததால் வேலப்பன் கூப்பிட்டது அவன் காதில் விழவில்லை. வேலப்பன் வீட்டினுள் நின்று சுற்றிலும் பார்த்த போது ஒரு குரல் "வாருங்கள் உட்காருங்கள். ராமப்பா வீட்டில்தான் இருக்கிறார். இதோ வந்து விடுவார்" என்று கூறியது. வேலப்பன் சுற்றிலும் பார்த்தான். அந்தக் குரல் ஒலி மூலையிலுள்ள கிளிக் கூண்டிலிருந்துதான் வந்தது என்று தெரிந்து கொண்டான். மறுபடியும் கிளி அதே வார்த்தைகளைக் கூறவே வேலப்பன் "ஆ! கிளி பேசுகிறதே என்ன அதிசயம்!" என்று ஆச்சரியப்பட்டான்.

அப்போது ராமப்பன் வீட்டினுள் வந்தான். வேலப்பன் வந்திருப்பதைக் கண்டு "வாருங்கள் என்ன விசேடம்?" என்று கேட்டான். வேலப்பனும் "நான் ஏதோ வேலையாகப் போன போது யாரோ பேசும் குரல் கேட்டது. உள்ளே வந்து பார்த்தால் அப்படிப் பேசியது இந்தக் கிளி தான் என்று தெரிந்தது. இதை எனக்கு விலைக்குக் கொடுக்கிறாயா?" என்று கேட்டான். ராமப்பனும் "விலைக்கா? முடியாது. எவ்வளவு சிரமப்பட்டு நல்ல வார்த்தைகள் சொல்லிக் கொடுத்து இதைப் பேசப் பழக்கி இருக்கிறேன். இதைக் கொடுக்க மாட்டேன்" என்றான். வேலப்பனோ விடாமல் "நீ மட்டும் இதை எனக்குக் கொடுத்தால் நூறு ரூபாய் கொடுக்கிறேன்" என்றான். ராமப்பன் அந்தக் கிளியை ஐந்து ரூபாய் கொடுத்து ஒரு மலைவாசியிடமிருந்து வாங்கினான். அதற்கு வேலப்பன் நூறு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னதைக் கேட்டு அக்கிளிக்கு இன்னும் அதிக விலை பெற எண்ணி சற்று பிகு செய்தான்.

முடிவில் அதை இருநூறு ரூபாய்க்குக் கொடுப்பதாகக் கூறி "இதோ பாரும் இப்போது விலைக்கு இதனை வாங்கி விட்டு நாளை வேண்டாம் என்றால் நான் பணத்தைத் திருப்பிக் கொடுக்க மாட்டேன். விலைக்கு விற்றேன் என்றால் விற்றது தான் தெரிந்ததா?" என்றான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்




"அந்த அம்பு என்னை ஒன்றும் செய்யாது. அது மலராக எனக்குப் படும், நீ என் விருப்பத்தை நிறைவேற்றி எனக்கு உயிர்ப் பிச்சை கொடு" என்று இரந்து அவள் கால்களில் விழுந்து வணங்கினான். அவள் இராமனையும் இலக்குவனையும் 'இறைவா இளையாங்னே' என்று கூவி அழைத்தாள்.

அவனுக்கு பிரம்மனால் ஏற்பட்டிருந்த சாபத்தால் அவளைத் தொட அஞ்சினான். அவளைத் தொடாமல் தரையோடு பர்ணசாலையைப் பெயர்த்து எடுத்து விமானத்தில் வைத்து விண்ணில் பறந்தான்.

மேகத்திலிருந்து நிலத்தில் விழும் மின்னலைப்போல அவள் மயங்கி விழுந்தாள். மயக்கம் நீங்கி 'ஓ' என்று கதறினாள். "நீ ஒரு கோழை; அதனால்தான் இந்த வஞ்சகச் செயலை மேற்கொண்டாய்" என்று விளம்பினாள்.

"மனிதரிடம் போர் செய்தால் அது என் வீரத்துக்கு இழுக்கு; வஞ்சனைதான் வெற்றி தரும்" என்றான்.

"சித்திரப்பாவை நிகர்த்த சீதை அவன் கூறுவதை எள்ளி நகையாடினாள். கற்புடைய பெண்களை வஞ்சிப்பது குற்றமில்லையா?" என்று கேட்டாள்.

சீதையின் குரல் கேட்டுக் கழுகின் வேந்தன் சடாயு என்பான் வந்து இடை மறித்தான்.

"அடே! எங்கே போகிறாய்? நில், நில்" என்று கூவிக்கொண்டு சடாயு வழி மறித்தான். "நீ அழிவைப் பெறப் போகிறாய். உன் சுற்றத் தாரையும் அழிக்கிறாய். இராமன் முன் உன் ஆற்றல் நிற்காது. ஏன் வீணே அழிவைத் தேடிக் கொள்கிறாய்; சீதையை விட்டுவிடு" என்றான்.

"பழுக்கக் காய்ச்சிய இரும்பில் தூவிய நீர் மீண்டும் வராது. அதே போலத்தான் சீதையின் நிலையும். அவளை உன்னால் மீட்க முடியாது" என்றான். சடாயுவும் இராவணனும் மோதிக் கொண்டனர். இராவணனைச் சடாயு தேரோடு கீழே சாய்த்தான். இனி இராவணன் பிழைக்க மாட்டான் என்ற நிலைமை உருவாகியது. அவனிடம் வேறு ஆயுதங்கள் இல்லை. தன் உறையில் "சந்திரகாசம்" என்னும் வாள் இருந்தது. அது அவனுக்குச் சிவபெருமான் அளித்தது. அதைக் கொண்டு சடாயுவின் சிறகுகளைக் கொய்தான்.

அவனும் சிறகு அறுபட்டுக் கீழே சாய்ந்தான். சீதை சடாயுவை நினைத்துப் புலம்பினாள். அவளை அந்தப் பர்ணசாலையோடு தன் தோளில் வைத்துக் கொண்டு இராவணன் ஆகாய வழியாக இலங்கையை அடைந்தான். அங்கே சீதையை அசோக வனத்தில் அசோக மரத்தின் நிழலில் சிறை வைத்தான். அரக்கியர் அவளைக் காவல் செய்தனர்.

இலக்குவன் சீதையைத் தனியே விட்டு வந்தோமே என்ற வருத்தம், இராமனைக் காணவில்லையே என்ற கவலை இரண்டிலும் அகப்பட்டுத் துடித்தான். இராமனைக் கண்டான்; அளவிலா மகிழ்ச்சி கொண்டான். இராமன் தன் தம்பியை அன்பால் தழுவிக் கொண்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கையே தனக்கு உதவி என்பவர்களுக்குத்தான் கடவுளும் உதவுகிறார்.
*- ஃபிராங்க்லின்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உணவுப் பஞ்சத்தில் இருந்து எம்மை நாம் பாதுகாக்க வேண்டாமோ!

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்*
என்பார் வள்ளுவர்.

எதையும் வருமுன்னர் காப்பாற்ற வேண்டும். இல்லையேல் அதனால் ஏற்படும் விளைவு வைக்கோலுக்கு அருகில் வைக்கப்பட்ட நெருப்பால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கு ஒப்பானதாகும்.

அந்தவகையில் இலங்கையின் சமகால பொருளாதார நெருக்கடி தொடர்பில் நாம் இன்னமும் விழிப்படையாமல் இருப்பது போன்ற நிலைமை தெரிகிறது.

அதாவது அரசுக்கெதிராகத் தென்பகுதியில் இடம்பெறுகின்ற ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் அனைத்தும் ஏதோ அண்டைநாட்டில் நடப்பதுபோலவும் அதற்கும் எமக்கும் தொடர்பு இல்லாதது போன்ற மனநிலையிலும் தமிழ் மக்களாகிய நாம் இருக்கின்றோம் என்பதை உணர முடிகின்றது.

69 இலட்சம் பேர் வாக்களித்து தனிச்சிங்களத்தின் பேரில் கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வந்த சிங்கள மக்களே ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழினத்தை அழிப்புச் செய்யும் மிகக் கொடிய போரை நடத்தி ராஜபக்ஷ தரப்பு தமிழ் மக்களைக் கந்தறுத்தபோது, இது அநியாயம் என்று பெரும்பான்மை இனத்தில் ஒரு குரலேனும் ஒலிக்கவில்லை.

மாறாக இலங்கை சிங்கள பௌத்த நாடு. இங்கு தமிழர்களுக்கு உரிமை இல்லை என்பதில் சிங்கள மக்களும் உறுதியாக இருந்தனர்.

ஆனால் இப்போது ஆட்சியில் இருப்பவர்கள் நாட்டைக் கந்தறுத்துவிட்டனர் என்று அவர்கள் உணரும்போதும் அதற்கு எதிராகக் கோசம் போடும்போதும் நாமும் தங்களுடன் சேர்ந்து கோசம் போட வேண்டும் என சிங்களத் தரப்புகள் கருதுமாயின், அது எந்த வகையிலும் நியாயமாகாது என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடாகவுள்ளது.

தமிழ் மக்களின் இந்த நிலைப்பாடு தொடர்பில் கருத்துரைக்க நாம் விரும்பவில்லை.

மாறாக, இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமை தமிழ் மக்களைப் பாதிக்காது என்று நம்மவர்கள் யார் கருதினாலும் அது மகா அபத்தமாகும்.

ஆம், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது அதன் ஆரம்ப கட்டத்தில் நம்மை பெரிதாக பாதிக்காவிடினும் பொருளாதார நெருக்கடி உச்சமடையும்போது எங்கள் மத்தியிலும் பஞ்சம், பசி, பட்டினி தலைவிரித்தாடும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்தாக வேண்டும்.

எனவே ஏற்படவிருக்கின்ற வறுமையில் இருந்து எமது மக்களைக் காப்பாற்ற இக்கணமே நாம் தயாராக வேண்டும்.

ஆம், எங்கும் வீட்டுத்தோட்டம், எங்கும் சிறுதானியச் செய்கை, எங்கும் உணவு உற்பத்தி என்ற கோசத்தோடு எங்கள் வீட்டில் விளைகின்ற பயிர்கள் எங்களின் உணவுத் தேவையை ஈடாக்கும் என்ற மனத்திடத்துடன் எங்கள் மக்களை தயார்படுத்துவோம்.

# நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நிதிக்கொள்கையை கடுமையாக்குக

## சர்வதேச நாணய நிதியம்

தற்போதைய நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக இலங்கையின் நிதிக்கொள்கை கடுமையாக்கப்பட வேண்டும் எனவும் வரிகளை உயர்த்துவதுடன் நெகிழ்வுத் தன்மையுடன் அந்நிய செலாவணி மாற்று வீதத்தை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) தெரிவித்துள்ளது.

முக்கியமான செலவினங்களை நிவர்த்தி செய்வதற்கும் கடன் நிலைத்தன்மையை நோக்கிய முன்னேற்றத்திற்கும் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கும் இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பதில் பணிப்பாளர் அன் மேரி தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நெகிழ்வுத் தன்மையுடன் அந்நிய செலாவணி மாற்றுவீதத்தை பேணிச்செல்ல வேண்டியதன் முக்கியத்தை சுட்டிக்காட்டியுள்ள அவர், பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு இலங்கை நிதிக்கொள்ளையை கடுமையாக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## அரியாலையில் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குடும்பப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண் அரியால்லை பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் போதை பொருள் விற்பனையில் பெண்கள் ஈடுபடுவது அதிகரித்த நிலையில் கடந்த 6 மாத காலப் பகுதிகளில் யாழில் 8 பெண்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## அரச செலவினங்களை கட்டுப்படுத்த கட்டுப்பாடு

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த நிதி அமைச்சின் செயலாளர் விசேட சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.


நெருக்கடியான சூழலில் அரசின் வருவாயை அதிகரிக்க காலம் எடுக்கும் என்பதால், அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பயன்படும் வகையில், அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதன்படி, எரிபொருள் மற்றும் தகவல் தொடர்பு கொடுப்பனவுகளை செலுத்துவதை கட்டுப்படுத்தவும் நீர் மற்றும் மின்சாரத்திற்கான செலவினங்களை கட்டுப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழுங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணைசந்தி, சுருவில் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சிப் பிரதேசத்தில்** 11 இ.எஸ். ஆர் இராணுவ முகாம்- நந்திக்கடல், 12 சி.எல். ஐ.-நந்திக்கடல், 16 இ.எஸ்.ஆர்-நந்திக்கடல், 59ஆம் பிரிவு இராணுவ முகாம்- வற்றாப்பளை, 6ஆவது எஸ். எல்.ஏ. எஸ்.சி இராணுவ முகாம்- நந்திக்கடல், விமானப்படை முகாம்- வற்றாப்பளை இராணுவ முகாம் எரிபொருள் நிரப்பு நிலையம்- வற்றாப்பளை, எப் .என்.ஏ (எம்.எல்.டி) இராணுவ முகாம்- நந்திக் கடல், குமுழமுனை பாடசாலை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை- குமுழ முனை, தேசிய நீர் வழுங்கல் மற்றும் வடிகாலமைப்புச்சபை- முல்லைத்தீவு, முல்லைத்தீவு மருத்துவமனை (மாஞ்சோலை), விசேட அதிரடிப்படை தலைமையகம்-வற்றாப்பளை, குமுழமுனை, கேப்பாப்பிலவு ,வற்றாப்பளை, குமாரபுரம், மாமூலை நீர்வழுங்கல் சபை, மாமூலை, மொபிடல் கோபுரம்-முள்ளியவளை,முள்ளியவளை, முறிப்புசந்தி, வற்றாப்பளை, நாவற்காடு ,பளப்பாணி-முறிப்பு, பிலாக் குடியிருப்பு, பொன்னகர், பூதன்வயல், செங்குந்தார் வீதி, தண்ணீரூற்று (கனுக்கேணி), தண்ணிமுறிப்பு, முள்ளியவளை 3ஆம் வட்டாரம், வற்றாப் பளைக்கோவில், விநி யோகம்: கனகராயன்குளம் சந்தி, கனகராயன் குளம் ஆலங்கு ளம் (புதுவிளான்), கறுப்புக்குத்தி இராணுவமுகாம், குறிசுட்டான் குளம், பரசங்குளம், புதூர்க்கோவிலடி, புத்தூர்க் கோபுரம், புதுக்குளம், புதூர்க்கிராமம், விக்னகுளம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மெனிகபாம் வலயம் 2, சக்தி கமமல்வத்து ஓயா, மெனிக்பாம் வலயம் 3-2, மெ்னிக்பாம் வலயம் 4, ஆண்டிய புளியங்குளம், சுகாதார மையம், கதிர்காமநகர், கிறிஸ்தவக்குளம், மெனிக் பாம் வலயம் 3-1, மெனிக்பாம், மெனிக் பாம் (அறிவுத்தோட்டம்), முகத்தான் குளம் 2, 2வது பண்ணை, பீடியா பார்ன், பீடியாபாரன் பழைய கிராமம், பெரியகாடு, புதுக்குளம், ஆண்டிய புளியங்குளம், சாஸ்திரி கூழாங்குளம், சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

இளைஞர்களுடன் சிரித்துக்களித்தபடியே குருதேவர் ம-வை அவ்வப்போது பார்த்தார். ம- வியப்புடன் அமைதியாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் ராம்லாலை அழைத்து அவரிடம் , 'பார்த்தாயா? இவர்கள் எப்படி எல்லாம் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்! இவனோ உம்மென்று அமர்ந்திருக்கிறான். வயது கொஞ்சம் அதிகம் அல்லவா?' என்றார். அப்போது ம-விற்கு வயது இருபத்தேழு.

ம-வையும் நரேந்திரரையும் பார்த்து, 'நீங்கள் இருவரும் ஆங்கிலத்தில் தர்க்கம் செய்யுங்கள். நான் கேட்கிறேன் ' என்றார்.

ம-வும் நரேந்திரரும் சிரித்தனர். பிறகு இருவரும் பேச ஆரம்பித்தனர். ஆனால் பேச்சு வங்க மொழியிலேயே நடந்தது. குருதேவரின் முன்னால் ம-வினால் தர்க்கம் செய்ய முடியவில்லை. தர்க்கம் செய்யும் மனப்பான்மை குருதேவரின் திருவருளால் ஒரு விதமாக அவரிடமிருந்து நீங்கி விட்டது. அதன் பிறகு எப்படி தர்க்கம் செய்வார் ? குருதேவர் மீண்டும் ஒருமுறை வற்புறுத்தினார் என்றாலும் இருவரும் ஆங்கிலத்தில் பேசவில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 51

அவற்றில் சில மூதூர் நகர மற்றும் திருகோணமலை நகர பிரதேசங்களுக்கு பல் உறுப்பினர் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்று மும்மொழிந்திருந்தன. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கிடையிலான சனத் தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும் மேலும் பல ஆலோசனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாததாலும் மேலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேரணைகளை குழுவால் கருத்தில் ஏற்க முடியவில்லை.

அது மட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப் பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப்பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத்தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத்தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை) போன்றவற்றை விட பிரதேச செயலகங்களின் தகவல்களையே எல்லை நிர்ணயத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதேநேரத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைப் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களை தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக்கொண்டுள்ளது. முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் முறையே 42%,31% மற்றும் 27% ஆக உள்ளடங்கி இருந்ததது.

இது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் அந்தந்த சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் தொகுதிகள் உருவாக்க முடியுமென்பதை குழு அவதானித்தது. மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப் பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை. எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ணயம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற்றைய இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப்பங்களை அந்த பிரதேசங்களில் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

**முழு மாவட்ட சனத்தொகையில் முஸ்லிம்கள், சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் முறையே 42%, 31% மற்றும் 27% ஆக உள்ளடங்கி இருந்தது. இது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்காமல் அந்தந்த சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் தொகுதிகள் உருவாக்க முடியுமென்பதை குழு அவதானித்தது.**

இரண்டு பிரேரணைகள் திருகோணமலை மற்றும் மூதூர் பிரதேசங்களுக்கு இரண்டு பல் அங்கத்துவ தேர்தல் தொகுதிகளை உருவாக்க பரிந்துரைத்திருந்தது. குழுவானது இந்த பிரேரணைகளை கவனத்தில் கொண்டதோடு, அனைத்து இனத்தவர்களினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டிய அவசியத்தையும் உணர்ந்துகொண்டது

இருபத்திமூன்று (23) சமர்ப்பிப்புகளுக்கு குழுவால் எந்த நடவடிக்கையும் எடுக்க தேவைப்படவில்லை. ஏனென்றால் அது குழுவின் பொறுப்பு ஆணைகளுக்கு உட்பட்டதாக அமையவில்லை.

தொகுதிகளுக்கு பெயரிடும்போது, சரித்திர பிரசித்தி பெற்ற பெயர் இடப்பட வேண்டிய தேவை இல்லாத சந்தர்ப்பத்தில் தொகுதிகளின் பெயர்கள், அத் தொகுதியிலுள்ள ஒரு பிரதேச செயலகத்தின் பெயரை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் சனத்தொகை அடிப்படையில் இட தீர்மானிக்கப்பட்டது. இது சில பிரேரணைகளில் பரிந்துரைத்த பெயர்களுடன் ஒத்துப் போகிறது.




சுருக்கமாகக் கூறினால் 06 பிரதேச செயலக பிரிவுகள் பிரிக்கப்படாமல் முழுவதுமாக தொகுதிகளுக்குள் அடங்குவதோடு, 05 பிரதேச செயலக பிரிவுகள் 2 தொகுதிகளுக்குள் பிரிக்கப்பட்டும் தொகுதிக்கான சராசரி மக்கள் தொகையை விட்டு -5.9% மற்றும் + 6.3% இற்கும் வெளியே செல்லாதவாறு இருக்கக்கூடியதாகவும் எல்லா இனத்தவர்களின் சமநிலைப்பிரதிநிதித்துவத்தை பாதுகாத்து திருகோணமலை மாவட்டம் 05 ஒற்றை அங்கத்துவ தொகுதிகளாக பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

அவை குச்சவெளி (57), திருகோணமலை (27), கிண்ணியா (36), சேருவில (50), மூதூர் (60) ஆகிய தேர்தல் தொகுதிகளாகும். அடைப்புக் குறிக்குள் தொகுதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது. விபரம் அட்டவணை (N6) இல் காட்டப்பட்டுள்ளது.

**வடமேல் மாகாணம் பற்றிய தகவல்கள்**

7,888 சதுர கிலோ மீற்றர் கொண்ட வட மேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில், 4,816 சதுர கிலோ மீற்றர் குருநாகல் மாவட்டத்திற்கும், 3,072 சதுர கிலோ மீற்றர் புத்தளம் மாவட்டத்திற்கும் உரியதாகும். நாட்டின் மொத்தப்பரப்பில் 12 சதவீதமான பகுதி இம்மாகாணத்தினுள் அடங்குகின்றது.

7,506 சதுர கிலோ மீற்றர் தரைப் பிரதேசத்தையும், 382 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பரப்பையும் கொண்ட இம்மாகாணத்தின் நிலப்பகுதியில் 4.8 சதவீதமான பகுதி உள்ளக நீர்ப்பரப்புக்குட்பட்ட பகுதிகளாகும். மாகாணத்தின் மொத்தப்பரப்பில் 13.4% அதாவது 1,059 சதுர கிலோ மீற்றர் 2010 ஆம் ஆண்டில் வனப்பகுதியாகக் காணப்பட்டது.

இம் மாகாணம் வடக்கே வடமாகாணத்தையும், தெற்கே மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களையும், கிழக்கே வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களையும், மேற்கே கடலையும் எல்லைகளாக் கொண்டு காணப்படுகின்றது. குருநாகல் இம் மாகாணத்தின் தலை நகரம் ஆகும். 2016 ஆம் ஆண்டில் இம் மாகாணத்தின் வீதிகளின் நீளம் 4101 கிலோ மீற்றராகக் காணப்பட்டது.

**7,888 சதுர கிலோ மீற்றர் கொண்ட வட மேல் மாகாணத்தின் மொத்தப்பரப்பில், 4,816 சதுர கிலோ மீற்றர் குருநாகல் மாவட்டத்திற்கும்,3,072 சதுர கிலோ மீற்றர் புத்தளம் மாவட்டத்திற்கும் உரியதாகும்.நாட்டின் மொத்தப்பரப்பில் 12 சதவீதமான பகுதி இம் மாகாணத்தினுள் அடங்குகின்றது.**

**வடமேல் மாகாணம் வடக்கே வட மாகாணத்தையும், தெற்கே மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களையும், கிழக்கே வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களையும், மேற்கே கடலையும் எல்லைகளாக் கொண்டு காணப்படுகிறது.**

அட்டவணை (N6) - திருகோணமலை மாவட்ட தேர்தல்தொகுதிகளும் சனத்தொகையும்

| தேர்தல்தொகுதி | சிங்களம் | தமிழ் | முஸ்லீம் | மற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| குச்சவெளி | 21472 | 30905 | 22122 | 387 | 74886 |
| திருகோணமலை | 18304 | 41783 | 12215 | 861 | 73163 |
| கிண்ணியா | 3710 | 5539 | 69982 | 70 | 79301 |
| சேருவில் | 57396 | 3772 | 10222 | 71 | 71461 |
| மூதூர் | 601 | 35874 | 44230 | 25 | 80730 |
| மொத்தம் | 101483 | 117873 | 158771 | 1414 | 379541 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## லிட்ரோ...

ரூபாயாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 22 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 12.5 கிலோ எரிவாயு கொள்கலன் விலையை 5,175 ரூபாயாக அதிகரிக்க லிட்ரோ நிறுவனம் தீர்மானித்திருந்தது.

எனினும், பின்னர் அதற்கு அனுமதி வழங்கமுடியாது எனத்தெரிவித்து குறித்த விலை அதிகரிப்பை நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இயக்கச்சி...

எரிபொருள் நிலையத்திற்கு திரும்ப முற்பட்டபோது மோதியதில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த பெண் உடுத்துறை வடக்கு தாளையடியைச் சேர்ந்த ஞானசீலன் தவமலர் (வயது-60) என்பவர் ஆவார்.

குறித்த பெண்ணின் சடலம் பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104,316)

## மீண்டும்...

வித்துள்ளது.

அதற்கமைய, நேற்று அவர் ஜனாதிபதி மாளிகையில் நீதியமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

நிதியமைச்சுக்கு மேலதிகமாக அவருக்கு இந்த பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## 600 மில்லியன்...

கடியை சமாளிக்க உலக வங்கி 600 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. முதற்கட்டமாக 400 மில்லியன் டொலர்கள் விரைவில் வழங்கப்படும் என உலக வங்கியின் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதி திருமதி சியோ கெண்டா (Chiyo Kanda) தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் இடையில் நேற்று பிற்பகல் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே திருமதி சியோ கெண்டா இதனைத் தெரிவித்தார். (ம-7)













## "இதயத்தை...

தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் நேற்று செவ்வாய்க்கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வதற்கு அனைவருக்கும் உரிமை உண்டு என்றும் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

போரின்போது குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களின் இதயத்தை உடைக்கும் கதைகளை இன்று நேரடியாக கேட்டு அறிந்துகொண்டதாகவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் அவசியமானது என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-7,33)

## நாளை நாடு...

அனுப்ப வேண்டாம் என பொருளாதார நிலையங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் அரச கட்டமைப்பில் உள்ள 10 தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

அதிபர், ஆசிரியர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் பிரிவெனா ஆசிரியர்கள் ஏப்ரல் 28 ஆம் திகதி சுகவீன விடுமுறை அறிவித்து பாரிய வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உப தலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். (ம-7)

## சம்பளம்...

பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில், தனது அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதிக் குறைவினால் சம்பளம்கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

50,000 சம்பளம் பெற்றவருக்கு சம்பள உயர்வு இல்லை என்பது தெளிவாகியுள்ளது. அப்போது பொருட்களின் விலை சுமார் 70 சதவீதம் அதிகரித்துள்ளது. அந்த மனிதன் உயிர் பிழைக்க கடுமையான போராட்டத்தில் ஈடுபட வேண்டியுள்ளது.

மறுபுறம், மேலதிக நேர ஊதியத்தை முடிந்தவரை குறைக்குமாறு எனக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நான் சுகாதார செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவித்தேன்.

அது ஏற்கனவே நெருக்கடியில் உள்ள மக்களுக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்திவிடும். அதனால் தற்போதைக்கு அப்படியெல்லாம் செய்யாமல் முடிந்தவரை அடுத்த சில மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் வகையில் தொடர்வோம். தற்போதைய நிலையில் அமைச்சில் ஒதுக்கீடு இருப்பதே பிரச்சினையாக மாறியுள்ளது.

எனவே [illegible] என்னவெனில், நாங்கள் புதிய வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

அடுத்த சில வாரங்களில் நிதி அமைச்சர் அதற்கான பணிகளை மேற்கொள்வார் என்று நான் நினைக்கிறேன். இல்லையெனில், சுகாதாரத்துறை மட்டுமல்ல, நாட்டின் பிற துறைகளும் வீழ்ச்சியடையக்கூடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## யார்...

தன்னை பதவி விலகுமாறு ஒவ்வொருவராகக் கூறினாலும் இராஜினாமா செய்வதற்கு தான் தயாரில்லை எனவும் எதிர்க்கட்சி பெரும்பான்மையைக் காட்டினால் மாத்திரமே பதவி விலகத் தயார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் பிரதிநிதிகளுடன் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள், எரிவாயு, மின்சாரம் மற்றும் மருந்து மற்றும் அத்தியாவசிய சேவைகள் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கான அனைத்து தடைகளும் நீக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த அவர், தற்போதுள்ள வரிசைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (ம-7)

## குடும்...

தடுப்பூசி வழங்காது ஏற்பூசி மட்டும் பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த சபாரத்தினம் கனகலிங்கம் (வயது-50) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்.

பெப்ரவரி 16 ஆம் திகதி குடும்பத் தலைவருக்கு தெருநாய் கடித்துள்ளது. அவர் மறுநாள் காலை பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றுள்ளார் அவருக்கு மருத்துவரின் ஆலோசனையில் ஏற்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர் நேற்று திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சில மணிநேரங்களில் உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,33)

## ராஜபக்சக்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் 13ஆவது சட்டத் திருத்தத்தை ஆதரிப்பதாகக் கூறிய சஜித், "நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர்" என்று தெரிவித்தார்.

"அந்த சட்டத் திருத்தம் எதுவாக இருக்கிறதோ, அதை அவ்வாறே ஆதரிக்கிறோம். கவலைப்படாதீர்கள். நாங்கள் இரட்டை நாக்கு கொண்டவர்கள் அல்லர். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றும் பேசுபவர்கள் அல்லர். நாங்கள் எங்கள் கொள்கையை தீவிரமாக கடைப்பிடிப்பவர்கள். எங்களின் அரசியலமைப்பின் ஒற்றையாட்சி தன்மையை 13 ஆவது சட்டத்திருத்தம் பாதிக்காது. இதை உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது. என் தந்தையும் 13ஆவது சட்டத்திருத்தத்தை ஆதரித்தார். அவரது மகனாகிய நானும் அதையேதான் செய்வேன்" என்றார். (ம-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM (CCIY)

**Position : Project Officer** **Walk-in Interview**

We are a well esteemed Business Development Service Providers functioning since 1999 in Jaffna district covering entire Northern Province in terms of promoting industrial and business environments. We directly work with Micro, Small & Medium Enterprises (MSMEs) ensuring the food quality, technical transfer programmes, workshops, seminars, webinars, etc.

We want to recruit an experienced professional for the position of Project Officer with the following requirements.

- 4-5 years of working experience in a similar position.
- Candidate should directly communicate and work with foreigners.
- Should possess at least a basic degree in Management, Sociology, Agriculture, etc.
- Should be fluent in English language both in written and spoken.
- Should work as a team with less supervision.
- Management, report writing, critical thinking, analytical, IT, etc skills are required.

The qualified interested candidates can attend the interview on 30th April 2022 from 10:00am to 12:00noon at the following address.

(C-4248)

Chairman No.55, Kachcheri Nallur Road, Jaffna.
T.P No: 021 222 6608 / 021 222 6609/ 070 366 3600



## கேள்வி அறிவித்தல்

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத் திட்டம் (PSDG) - 2022**

**உள்ளூராட்சி திணைக்களம் கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி**

1. கரைச்சி பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடைநிதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்ட வணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படு கின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்வி தாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்புக்கான சிடா (CIDA) பதிவினை மேற்கொண்ட வராகவும் இருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule 5)** கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. குறித்த பெறுகை 03/2020 (i) , 04/2016 (iii) இலக்கங்களை உடைய 11/01/2021, 18/02/2021ஆம் திகதிகளின் பொது நிதி சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, **E-Mail: kilinochchi1kps@gmail. com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் 14.00 மணி வரை 10.05.2022ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 27.04.2022ஆம் திகதியிலிருந்து 10.05.2022ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீள ளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/= (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 10.05.2022ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்வி கள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்து மூன்று நாட்கள் - 12.07.2022 வரையும்) செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ)மில்லியன் (With out Vat) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KN/KPS/2022/ PSDG-3 | கிளிநொச்சிசேவைச் சந்தையில் தண்ணீர்த்தொட்டி அமைத்தல் | 1.83Mn | 91 நாட்கள் | C9,C8 | 27,500.00 | 12.07.2022 |

11. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 04.05.2022ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடை பெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப் பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தவிசாளர், கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.** (C-4247) 27.04.2022



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (11179)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 96 பரப்பு காணி 2 பரப்பாகவும் 2 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- வசாவிளான் மகா வித்தியாலயத்தில் இருந்து (பலாலி வீதி) 1 Km தூரம்.
- வசாவிளான் தபால் கந்தோர் அருகாமை (300m தூரம்)
- 14 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை ஐந்து இலட்சம்.
- அச்சுவேலி – தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து 800m தூரம்.

(11152)

**074 043 6599, 074 043 6375**



10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

UK அல்லது **கனடாவில் உயர்கல்வி**

**குறைந்த கட்டணத்தில்**
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிடமுடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (C-4250)

**WORLD EDUCATION CONSULTANCY**
0779265447 / 0217200989



## வேலைவாய்ப்பு

வீட்டுத் தேவைக்கு
வாகன சாரதி தேவை.

தொடர்பு:-
**021 222 4909**
**077 773 0567**
(11178)



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4249)

VISA
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
**0777-068-777**



## IELTS
### NEW BATCH

Course Fee : Special offer + Basic & Advance grammar

Cont : **077 798 9830**
**By - B.MURALI**

இல.53, சிவகுருநாதர் வீதி,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
(11114)


## 31ஆம் நாள்
## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 29.03.2022
அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

**அமரர் திருமதி**
**மகேஸ்வரி**
**கணேந்திரன்**

தோற்றம் 14.07.1948
மறைவு 29.03.2022

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளைய தினம் (28.04.2022) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கல்லூரி வீதி, தாமரைக் குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னா ரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ் விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூகவலைத் தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந் தோருக்கும் அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடக்கரை, பருத்தித்துறை. (C-4244) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.